



admin@dhinakani.com
RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI
www.dhinakani.com
காலை நாளிதழ்




| Vol: 02 | Issue: 361 | 4 Pages | 27.7.2025 | Sunday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 361 | 4 பக்கங்கள் | 27.7.2025 | ஞாயிற்றுக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும் மற்று**

**நிலையாமை காணப் படும்**

**விளக்கம்:**

**இருவகைப் பற்றும் அற்றபொழுதே அந்நிலை பிறவித் துன்பத்தை ஒழிக்கும், இல்லையானால் (பிறவித்துன்பம் மாறி மாறிவந்து)நிலையாமைக்காணப்படும்.**

# மருத்துவமனையில் ஓய்வெடுக்க மனமில்லை... மு.க.ஸ்டாலின்

சென்னை, ஜூலை 27

முதல்அமைச்சர்மு.க.ஸ்டாலின் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டு இருப்பதாவது;

திமுகஉடன்பிறப்புகள்களத்தில் ஓய்வின்றி களமாடிக் கொண்டிருக்கும் போது, மருத்துவர்கள் வற்புறுத்தினாலும் எனக்கு மருத்துவமனையில் ஓய்வெடுக்க மனமில்லை!

உயிராக நம்மை இயக்கும் கழகத்தின் களச்செயல்பாடுகள் குறித்து மண்டலப் பொறுப்பாளர்களிடம் ஆலோசித்தபோது, உறுப்பினர் சேர்க்கையில் 150 தொகுதிகளில் நம் இலக்கை எட்டிய இன்பச் செய்தியை அவர்கள் பகிர, ஓரணியில் தமிழ்நாடு முன்னெடுப்பு குறித்த ஆலோசனைகளை வழங்கிஉற்சாகம்பெற்றேன்!"

இவ்வாறு அதில் அவர் தெரிவித்துள்ளார்.



## மாலத்தீவுக்கு ரூ.4,850 கோடி கடன் வழங்குவதாக இந்தியா அறிவிப்பு



மாலி, ஜூலை 27

பிரதமர் மோடி இங்கிலாந்து பயணத்தை முடித்துக்கொண்டு நேற்று இரவு தனி விமானம் மூலம் மாலத்தீவு புறப்பட்டார். 2 நாட்கள் பயணமாக மாலத்தீவு சென்றுள்ள பிரதமர் மோடியை அந்நாட்டின் அதிபர் முகமது முய்சு விமான நிலையத்திற்கு நேரில் சென்று வரவேற்றார்.

தொடர்ந்து இருநாட்டு தலைவர்களும் இருநாட்டு உறவு, வர்த்தகம் உள்பட பல்வேறு விவகாரங்கள் குறித்து ஆலோசனை நடத்தினர். நாளை நடைபெறும் மாலத்தீவின் 60வது சுதந்திர தின விழாவில் பிரதமர் மோடி சிறப்பு விருந்தினராக பங்கேற்க உள்ளார்.

இதனிடையே, மாலத்தீவுக்கு இந்தியா ரூ.4,850 கோடி கடன் வழங்க உள்ளதாக பிரதமர் மோடி அறிவித்துள்ளார். மேலும், இந்தியாமாலத்தீவு இடையே இருதரப்பு முதலீட்டு ஒப்பந்தத்தை இறுதி செய்வதற்கு இருநாட்டு அரசுகளும் முயற்சி செய்யும் என்றும், தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்திற்கான பேச்சுவார்த்தைகள் ஏற்கனவே தொடங்கிவிட்டது என்றும் பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

## கம்போடியாவுடன் மோதல்: தாய்லாந்தில் அவசர நிலை பிரகடனம்



பாங்காங், ஜூலை 27

தாய்லாந்து கம்போடியா ஆகிய நாடுகளின் எல்லையில் தா முயென் தாம் என்ற கோவில்அமைந்துள்ளது. இந்த கோவில் அமைந்துள்ள பகுதிக்கு இரு நாடுகளும் உரிமை கோருகின்றன. இதனால் இரு நாடுகள் இடையே நீண்ட காலமாக எல்லை பிரச்சினை நிலவுகிறது. அந்த பிரச்சினை தொடர்பாக கடந்த மே மாதம் இரு நாட்டு ராணுவ வீரர்களும் மோதிக் கொண்டனர்.

அப்போது நடந்த துப்பாக்கிச்சூட்டில் கம்போடிய வீரர் ஒருவர் கொல்லப்பட்டார். இதனையடுத்து இரு நாடுகளும் தங்களது எல்லையை மூடுவதாக அறிவித்தன. இதற்கு பதிலடியாக தாய்லாந்தில் இருந்து காய்கறி, பழங்கள் இறக்குமதி மற்றும் அங்குள்ள திரைப்படங்களை திரையிட கம்போடியாஅரசாங்கம்தடைவிதித்தது.இதனால்இருநாடுகள்இடையேயான உறவில் சிக்கலான நிலை நீடித்தது. இதற்கு தீர்வு காண இருதரப்பு தலைவர்கள் பேச்சுவார்த்தை மேற்கொண்டனர். ஆனால் இதில் எவ்வித உடன்பாடும் எட்டப்படவில்லை.எனவே தனது நாட்டில் உள்ள கம்போடியா தூதரை தாய்லாந்து வெளியேற்றியது.

மேலும் தன்னுடைய நாட்டின் தூதரையும் கம்போடியாவில் இருந்து வெளியேறுமாறு தாய்லாந்து அரசாங்கம் உத்தரவிட்டது.இதன் காரணமாக இரு நாடுகள் இடையேயான மோதல் மீண்டும் வெடித்தது. தாய்லாந்தின் சுரின், சிசா கெட் மற்றும் கம்போடியாவின் ஒடார் மீஞ்சே ஆகிய எல்லைப்புற மாகாணங்களில் உள்ள 6 நகரங்களுக்கு மோதல் பரவியது.

அப்போது இரு நாட்டு ராணுவமும் ராக்கெட் வெடிகுண்டு, பீரங்கி போன்றவற்றால் பரஸ்பரம் தாக்கிக் கொண்டனர். இதில் சிசா கெட் மாகாணத்தில் உள்ள ஒரு பெட்ரோஸ் பங்க் மீது கம்போடியா ராணுவம் தாக்குதல் நடத்தியது.இதனால் பயங்கர சத்தத்துடன் பெட்ரோல் பங்க் வெடித்துச் சிதறியது. இதில் 6 பேர் உடல் கருகி உயிரிழந்தனர். அதேபோல் மற்ற இடங்களில் நடைபெற்ற தாக்குதலில் மேலும் 5 பேர் பலியாகினர். எனவே எல்லைப்பகுதியில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேறுமாறு அரசாங்கம் அறிவுறுத்தியது. இதனால் அங்குள்ள பதுங்கு குழிகளில் மக்கள் தஞ்சம் அடைந்தனர். இந்த மோதலால் இரு நாடுகளின் எல்லையில் பதற்றமான சூழல் நிலவுகிறது.

இந்தநிலையில், தாய்லாந்து சர்வதேச எல்லையையொட்டி அமைந்துள்ள 8 மாகாணங்களில் அவசரநிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. கம்போடியாவுடன் சண்டை நிறுத்தம் செய்துகொள்ள மூன்றாம் தரப்பு நாடுகள் மேற்கொண்ட முயற்சிகள் பலனளிக்கவில்லை. இதையடுத்து, மக்கள் யாரும் வெளியே செல்ல வேண்டாமெனவும் தயார் நிலையில் இருக்கவும் உள்ளூர் அதிகாரிகளின் அறிவுறுத்தல்களை கேட்டு நடந்துகொள்ளவும் அறிவுறுத்தப்படுவதாக தாய்லாந்து அறிவித்துள்ளது.

## 21 வாரங்களில் பிறந்து கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம்பிடித்த குழந்தை



வாஷிங்டன், ஜூலை 27

அமெரிக்காவின் லோவா மாகாணத்தை சேர்ந்த ரண்டால் கீன்மோலி தம்பதிக்கு கடந்த ஆண்டு ஜூலை 5ந்தேதி ஒரு ஆண் குழந்தை பிறந்தது. அந்த குழந்தைக்கு நாஷ் கீன் என பெயரிடப்பட்டது. சமீபத்தில் தனது முதல் பிறந்தநாளை கொண்டாடிய அந்த குழந்தை, பிறக்கும்போதே கின்னஸ்சாதனை புத்தகத்தில் இடம்பிடித்தது.

குழந்தை நாஷ் தனது தாயின் கருவில் இருந்து வெறும் 21 வாரங்களில், அதாவது சுமார் 133 நாட்களுக்கு முன்பாகவே குறை பிரசவத்தில் பிறந்தது. குழந்தை பிறந்தபோது அதன் எடை சுமார் 283 கிராம் மட்டுமே இருந்தது. இதன் மூலம் மிக குறைந்த காலத்தில் குறைப்பிரசவத்தில் பிறந்த குழந்தை என்ற கின்னஸ் சாதனையை அந்த குழந்தைக்கு தனதாக்கியுள்ளது.

குழந்தை நாஷ் சுமார் 6 மாதங்கள் அயோவா பல்கலைக்கழக குழந்தைகள் மருத்துவமனையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் வைக்கப்பட்டிருந்தது. அங்கு குழந்தையின் உடல்நிலை தீவிரமாக கண்காணிக்கப்பட்டு வந்தது. கடந்த ஜனவரி மாதம்தான் குழந்தையை அதன் பெற்றோருடன் வீட்டிற்கு செல்ல மருத்துவர்கள் அனுமதித்தனர். சமீபத்தில் குழந்தை நாஷின் பிறந்தநாளை அதன் பெற்றோர் மகிழ்ச்சியுடன் கொண்டாடினர்.

இதற்கு முன்பாக மிக குறைந்த காலத்தில் குறை பிரசவத்தில் பிறந்த குழந்தை என்ற சாதனை கடந்த 2020ம் ஆண்டு அலபாமாவில் பிறந்த குழந்தைக்கு சொந்தமாக இருந்தது. அந்த சாதனையை ஒரு நாள் வித்தியாசத்தில் குழந்தை நாஷ் முறியடித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## காமராசர் பிறந்த நாள் மற்றும் தமிழ் நாடு பெயர் மாற்ற நாளை முன்னிட்டு ஜே.எம்.ஜே மீடியா அனுசரணையுடன் இந்தியாவில் நடந்த சிறப்பு நிகழ்வு

இந்தியாவின் திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி வட்டம், ஆலங்காயம் ஒன்றியத்தில் உள்ள வள்ளிப்பட்டு ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் இன்று காமராசர் பிறந்த நாள் மற்றும் தமிழ் நாடு பெயர் மாற்ற நாளை முன்னிட்டு ஜே.எம்.ஜே மீடியா அனுசரணையுடன் இந்த நிகழ்வு வெகு சிறப்பாக நடைபெற்றது

இந்தியா நாட்டுக்காகப் பாடு பட்டு புதிய மாற்றத்தை ஏற்படுத்தி வளர்ச்சியை கொண்டு வந்த சென்னை மாநில முதலமைச்சர் காமராசர் சேவையை ஜே.எம்.ஜே மீடியா வாயிலாக மாணவ, மாணவியர்களுக்கு ஆசிரியர்கள் மூலம் எடுத்துச் சொல்லப்பட்டது.



பள்ளியின் தலைமை ஆசிரியர் சி. சிவஞானம் மற்றும் அனைத்து ஆசிரியர்களும் நிகழ்ச்சியில் பங்கேற்று, மாணவர்களுக்கு தேசியப் பற்று,காமராசரின் வாழ்ந்த வாழ்க்கை வரலாறை எடுத்துச் சொல்லி இவரை போன்று தலை சிறந்த தலைவராக மாணவர்கள் வரவேண்டும் என்பதோடு சமூகத்திற்கும் சேவைகள் செய்ய வேண்டும் என்ற உணர்வுகளை ஊட்டும் வகையில் உரையாற்றினர்.

அத்தோடு இந்த நிகழ்வில் காமராசர் பற்றி உணர்வு பூர்வமாண பேச்சுக்கள் பாடல்கள் அவரை போன்ற முகக்கவசம் அணிந்து நாடகங்களும் மாணவர்களால் அரங்கேற்றப்பட்டது.

இந்நிகழ்வின் மூலம் மாணவர்கள் தாங்களும் இவரை போன்று ஒரு முன்மாதிரியான தலை சிறந்த தலைவராக உருவாகுவோமென்ற உருதிமொழி எடுத்ததே இந்த நிகழ்வின் சிறப்பம்சமாகும்

அத்தோடு அறிஞர் அண்ணா தமிழக முன்னாள் முதல்வர் அர்கள் "மெட்ராஸ் மாகாணம் என்பதை" தமிழ் நாடு என்று அறிவித்த நாள் பற்றியும் பெருமையாக பேசப்பட்டது.

இந்த நிகழ்வு ஜே.எம்.ஜே மீடியா நிறுவனத்தின் பணிப்பாளர் ஜஸூரா ஜலீலின் வழிகாட்டலில் வெகு சிறப்பாக ஒருங்கிணைத்து நடைபெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

## அவதூறான பதிவு: நடிகர் விநாயகன் மீது டி.ஜி.பி.யிடம் புகார் :



கேரள முன்னாள் முதல் மந்திரி வி.எஸ். அச்சுதானந்தன் உள்பட மறைந்த தலைவர்களை அவமதித்ததற்காக நடிகர் விநாயகனை கைது செய்ய வலியுறுத்தி மாநில டி.ஜி.பி.யிடம் இளைஞர் காங்கிரஸ் சார்பில் புகார் அளிக்கப்பட்டு உள்ளது .





தாராபுரம் கவுண்டச்சிபுதூர் ஊராட்சி ஒன்றியம் கொண்டரசம் பாளையம் பேருந்து நிலையம் அருகில் ரூபாய் 8.5 லட்சம் மதிப்பீட்டில் தாராபுரம் சட்டமன்ற உறுப்பினர் நிதியில் புதிய பயணியர் நிழல் கூடை அமைக்கும் பணிக்கு அடிக்கல் நாட்டினார் மனித வள மேலாண்மைதுறை அமைச்சர் N. கயல்விழி செல்வராஜ் அவர்கள் உடன் ஒன்றிய செயலாளர் SVS செந்தில்குமார், நாட்டு துறை மற்றும் அரசு அதிகாரிகளும் ஊர் பொதுமக்களும் பெருந்திரளாக கலந்து கொண்டனர்

## ஓணம் பண்டிகை: 6 லட்சம் குடும்பங்களுக்கு 15 பொருட்கள் தொகுப்பு ; கேரள அரசு அறிவிப்பு

கேரளாவில் ஆண்டுதோறும் ஓணம் பண்டிகை வெகு விமரிசையாக கொண்டாடப்படுகிறது. இந்த ஆண்டு வருகிற செப்டம்பர் மாதம் 5ந் தேதி கொண்டாடப்பட உள்ளது.

இதையொட்டி மஞ்சள் நிற ரேஷன் கார்டுதாரர்களுக்கு கேரள அரசு சார்பில் 15 பொருட்கள் அடங்கிய இலவச தொகுப்பு வழங்கப்படும் என்று மாநில அரசு அறிவித்து உள்ளது. இதன் மூலம் 6 லட்சம் குடும்பங்களுக்கு 15 மளிகை பொருட்கள் அடங்கிய ஓணம் தொகுப்பு இலவசமாக வழங்கப்பட உள்ளது





தினகனி



# ராயபுரம், திரு.வி.க.நகர் தூய்மைப் பணிகளுக்கான வாகனங்கள் மேயர் பிரியா தொடங்கி வைத்தார்



சென்னை, ஜூலை 26

சென்னை மாநகராட்சி வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்திருப்பதாவது:

பெருநகர சென்னை மாநகராட்சியின் ராயபுரம் மற்றும் திரு.வி.க.நகர் மண்டலங்களில் தனியார் நிறுவனம் மூலம் தூய்மைப் பணிகள் மேற்கொள்வதற்காக பேட்டரியால் இயங்கும் 40 மூன்று சக்கர வாகனங்கள் (BOV Vehicles) மற்றும் 12 சாலை பெருக்கும் எந்திரங்கள் (E Mechanical Sweeping Machines) ஆகியவற்றினை மேயர் ஆர்.பிரியா ரிப்பன் கட்டட வளாகத்தில் இன்று (25.07.2025) கொடியசைத்து பயன்பாட்டிற்குத் தொடங்கி வைத்தார்.

ராயபுரம் மற்றும் திரு.வி.க.நகர் மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் உருவாகும் திடக்கழிவுகள் சேகரிக்கப்பட்டு தானியங்கி வாகனங்கள் மூலம் உரிய இடங்களுக்கு கொண்டு செல்லும் பணிகள் மேற்கொள்ளப்படும். மண்டலம் 5 மற்றும் 6 ஆகிய இரண்டு மண்டலங்களில் 38.92 சதுர கிலோமீட்டர் பரப்பளவு மற்றும் 637.50 கி.மீ. சாலைகள் மற்றும் 30 வார்டுகள் உள்ளன. இவற்றில் 4,21,926 வீடுகள் உள்ளன. நாள்தோறும் ஒரு நபருக்கு சராசரியாக 0.655 கிலோ திடக்கழிவுகள் உற்பத்தியாகிறது.

வீடுகளிலிருந்து பிரித்தே சேகரிக்கப்படும் திடக்கழிவுகளைச் சேகரித்தல், தெருக்கள், சாலைகள் மற்றும் நடைபாதை சுத்தம் செய்யும் பணிகள், சாலையோர சாக்கடை மற்றும் கால்வாய்களில் இருந்து வரும் படிமண் கழிவுகளை சேகரித்தல் மற்றும் கடத்தல், பேரிடர் கழிவுகள், தோட்டக்கழிவுகள், வீட்டு அபாயகர கழிவுகள் (DHW) ஆகியவற்றை சேகரித்தல் மற்றும் புறப்படுத்தல், கடற்கரை பகுதிகளை சுத்தம் செய்தல் மற்றும் குப்பை அகற்றும் பணிகள் உள்ளிட்ட தூய்மைப் பணிகள் இந்த இரண்டு மண்டலங்களில் இந்நிறுவனத்தால் மேற்கொள்ளப்படுகிறது.

இந்த மண்டலங்களில் திடக்கழிவு மேலாண்மைப் பணிகளை மேற்கொள்ள ஏதுவாக, பேட்டரியால் இயங்கும் 1306 மூன்று சக்கர வாகனங்கள், தெருக்களை சுத்தம் செய்யும் 12 எந்திர வாகனங்கள், 8 கியூபிக் மீட்டர் கொள்ளளவு கொண்ட 6 குப்பை நெறிப்படுத்தும் வாகனங்கள் (Refuse Compactors), 14 கியூபிக் மீட்டர் கொள்ளளவு கொண்ட 39 குப்பை நெறிப்படுத்தி வாகனங்கள், 1100 லிட்டர் கொள்ளளவு கொண்ட குப்பை நெறிப்படுத்தும் 4,005 குப்பைத் தொட்டிகள் (Refuse Compactor Bins), 120 லிட்டர் கொள்ளளவு கொண்ட 2,286 தெரு துடைப்பு குப்பைத் தொட்டிகள், குப்பைத் தொட்டிகளை கழுவும் 1,504 எந்திரங்கள் (Bin Washers), தோட்டக்கழிவுகள் அகற்றும் 5 வாகனங்கள் (Horticultural Waste Removal Vehicles)), குப்பைத் தொட்டிகளை நகர்த்தும் 6 ஏந்தி எந்திரங்கள் (Backhoe Loaders), பேருந்து சாலைகளுக்கான 1,036 குப்பைத் தொட்டிகள், 3 ஸ்கிட் ஸ்டியர் ஏந்திகள் (Skid Steer Loaders), சுத்தமாக்கப்பட்ட வழித்தட/பகுதிக்கான பேட்டரியால் இயங்கும் 6 வாகனங்கள் (Battery Operated Vehicles for LitterFree Corridor/Area), 39 நிலைத்த குப்பை நெறிப்படுத்திகள் (Static Compactors), ஹாட்ஸ்பாட் (Hotspot) பகுதிக்கான 2 பெரிய வாகனங்கள் (HMV), 2 சிறிய வாகனங்கள் (LMV), திடமாக்கப்பட்ட காலக் கழிவுகளுக்கான 6 சிறிய வாகனங்கள் (LMV for Carcass Waste), வீட்டு அபாயகர கழிவுகளுக்கான 27 வாகனங்கள் (Domestic Hazardous WasteLMV), தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்பு பகுதிகளை சுத்தம் செய்யும் 5 LMV வாகனங்கள் மற்றும் 5 MUV வாகனங்கள் (MultiUtility Vehicle), தோட்டக்கலை கழிவுகளுக்கான 6 LMV வாகனங்கள் மற்றும் முக்கிய சேவைகளுக்கான 5 LMV வாகனங்கள் இந்த மண்டலங்களில் தூய்மைப் பணிக்காக பயன்படுத்தப்படவுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் இந்த இரண்டு மண்டலங்களிலும் வசிக்கும் 16,87,703 எண்ணிக்கையிலான பொதுமக்கள் பயன் அடைவார்கள்.

இந்நிகழ்ச்சியில், துணை மேயர் மு.மகேஷ் குமார், மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், வட்டாரதுணை ஆணையாளர்கள் கட்டா ரவி தேஜா, (வடக்கு), எச்.ஆர்.கவுஷிக், (மத்தியம்), மாமன்ற ஆளுங்கட்சித் தலைவர் ந.ராமலிங்கம், நிலைக்குழுத் தலைவர் (பொதுசுகாதாரம்) டாக்டர் கோ. சாந்தகுமாரி, மண்டலக்குழுத் தலைவர்கள் பி.ஶ்ரீராமுலு (ராயபுரம்), சரிதா மகேஷ்குமார் (திரு.வி.க.நகர்), Chennai Enviro நிறுவனத்தின் தலைமை செயல் அலுவலர் இஷான் அல்லா, துணைத் தலைவர் எஸ். வெங்கடேசன், திட்டத் தலைவர் பரிசுத்தம் வேத முத்து மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# முடித்தே ஆக வேண்டும்.. த.வெ.க நிர்வாகிகளுக்கு விஜய் போட்ட அதிரடி உத்தரவு

சென்னை, ஜூலை 27

தமிழக சட்டசபை தேர்தலுக்கு இன்னும் 10 மாதங்களே இருக்கும் சூழ்நிலையில் தமிழக தேர்தல் களம் இப்போதே சூடுபிடிக்க தொடங்கி விட்டது. அரசியல் கட்சிகள் இடையே கூட்டணி பேச்சுவார்த்தை திரைக்கு பின்னும், முன்னும் தொடங்கி உள்ளன.

திமுக கூட்டணியில் காங்கிரஸ், மதிமுக விடுதலை சிறுத்தைகள், கம்யூனிஸ்டு உள்ளிட்ட கட்சிகள் உள்ளன. இந்த கூட்டணி கடந்த 2017ம் ஆண்டு முதல் நீடித்து வருகிறது.

அதேபோல் பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியில் அதிமுக இணைந்திருந்தாலும் தமிழகத்தை பொறுத்தவரை அதிமுக தலைமையில்தான் கூட்டணி என்று அறிவிக்கப்பட்டு உள்ளது. சீமானின் நாம் தமிழர் கட்சி, கடந்தகால தேர்தலை போலவே தனித்து போட்டி என்பதில் உறுதியாக இருக்கிறது.

நடிகர் விஜய்யின் தவெக தேர்தல் களத்திற்கு புதிது. திமுக பாஜகவுடன் கூட்டணி அமைக்க மாட்டோம் என்று கடந்த செயற்குழு கூட்டத்தில் விஜய் திட்டவட்டமாக அறிவித்து விட்டார். அப்படியென்றால் அதிமுகவுடன் விஜய் கட்சி கூட்டணி அமைக்குமா? என்ற கேள்வி எழுந்தது. ஏற்கனவே அதிமுக பாஜக கூட்டணி உறுதி செய்யப்பட்டு விட்டதால், அதிமுகவுடன், தவெக கூட்டணி அமைப்பதற்கான வாய்ப்பும் இல்லாமல் போகியுள்ளது.

தற்போதைய சூழ்நிலையில் வரும் சட்டசபை தேர்தலில் விஜய்யின் அறிவிப்பு, சீமானின் தனித்து போட்டி என்ற விடாப்பிடி கொள்கை ஆகியவற்றால் 4 முனை போட்டி நிலவுவது உறுதியாகி இருக்கிறது.

இந்த சூழலில் தமிழக அரசியல் களத்தின்



முதன்மை சக்தியான தவெக 2ம் மாநாடு மதுரையில் ஆகஸ்டு 25ம் தேதி நடைபெறும் என்று அக்கட்சி தலைவர் விஜய் அறிவித்திருந்தார். முன்னதாக நடிகர் விஜய், கடந்த ஆண்டு விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி அருகே வி.சாலை கிராமத்தில் தனது கட்சியின் முதல் மாநாட்டை நடத்தினார்.

இதனிடையே 'மக்கள் விரும்பும் முதல்அமைச்சர் வேட்பாளர் விஜய்' என வீடு வீடாக சென்று த.வெ.க நிர்வாகிகள் மற்றும் பூத் கமிட்டி நிர்வாகிகள் பிரசாரத்தைத் துவங்கி உள்ளனர்.

இந்நிலையில் முறையாக பூத் கமிட்டி நிர்வாகிகளை நியமனம் செய்யாத நபர்கள் மீது நடவடிக்கை எடுக்க த.வெ.க தலைவர் விஜய் உத்தரவிட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

இதன்படி கிளை நிர்வாகிகள் வீடு வீடாக சென்று மக்கள் பிரச்சினைகளை கேட்க வேண்டும் என்றும், தங்களுக்கு ஒதுக்கப்பட்ட பகுதிகளில் உள்ள வீடுகளுக்கு த.வெ.க நிர்வாகிகள் நேரில் செல்ல வேண்டும் என்றும், 2 வாரங்களுக்கு ஒரு முறை நிர்வாகிகளின் நடவடிக்கைகளை தொகுத்து கட்சி தலைமைக்கு வழங்க வேண்டும் என்றும்

பூத் கமிட்டி நிர்வாகிகள் நியமனத்தை விரைவில் முடித்தே ஆக வேண்டும் என்றும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

# அரசு பள்ளி மாணவிகளுக்கு தற்காப்பு கலை பயிற்சிகள் அளிக்க ரூ.15½ கோடி நிதி ஒதுக்கீடு

சென்னை, ஜூலை 26

ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வித் திட்டத்தின் கீழ் அரசு பள்ளிகளில் 6ம் வகுப்பு முதல் பிளஸ்2 வரையில் படிக்கக் கூடிய மாணவிகளுக்கு தற்காப்பு கலை பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. அதன்படி, கராத்தே, ஜூடோ, தேக்வோண்டோ, சிலம்பம் போன்ற பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. இவ்வாறு அளிக்கக் கூடிய பயிற்சிகள் வாயிலாக மாணவிகளுக்கு தன்னம்பிக்கை ஊட்டப்படுவதுடன் அவர்களுடைய பாதுகாப்புக்கும் இது உறுதுணையாக அமைகின்றன. அந்த வகையில் இந்த பயிற்சிகளை வழங்குவதற்காக ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி மாநில திட்ட இயக்ககம் நிதியை ஒதுக்கீடு செய்துள்ளது.

6,045 அரசு நடுநிலைப் பள்ளிகளில் 6 முதல் 8ம் வகுப்பு வரைபடிக்கும் மாணவிகளுக்கு பயிற்சி அளிக்க ஒவ்வொரு பள்ளிக்கும் பயிற்சியாளர்களுக்கு மாதம் ரூ.4 ஆயிரம் வீதம் 3 மாதங்களுக்கு ரூ.12 ஆயிரம் வழங்கும் வகையில் ரூ.7 கோடியே 25 லட்சத்து 40 ஆயிரம் ஒதுக்கப்பட்டு உள்ளது. அதேபோல், 5,804 உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கு பயிற்சி அளிக்க ரூ.8 கோடியே 23 லட்சத்து 56 ஆயிரம் என மொத்தம் ரூ.15 கோடியே 48 லட்சத்து 96 ஆயிரம் நிதி ஒதுக்கப்பட்டு இருக்கிறது. இவ்வாறு ஒதுக்கப்படும் நிதி விவரம், தற்காப்பு கலை பயிற்சிகள் விவரம், பயிற்சியாளர் விவரம் ஆகியவற்றை முறையாக பராமரிக்க வேண்டும். வாரத்தில் 2 நாட்கள் வீதம் 3 மாதங்களுக்கு 24 பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட வேண்டும். அனைத்து மாணவிகளுக்கும் இந்த தற்காப்புக் கலை பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும் என்பது உள்பட பல்வேறு அறிவுரைகள் வழங்கப்பட்டு இருக்கின்றன.

# படுக்கைக்கு வர மறுத்த மனைவி... கீழே தள்ளி தொழிலாளி செய்த கொடூர செயல்

திருவாரூர், ஜூலை 27

திருவாரூர் மாவட்டம் கூத்தாநல்லூர் அருகே உள்ள புள்ளமங்கலம் ஊட்டியாணி காலனி தெருவை சேர்ந்தவர் ரமேஷ்(வயது 49). கூலித் தொழிலாளி. இவருக்கு திருமணமாகி செல்வி(39) என்ற மனைவியும், வினித்(24), விக்ரம்(22) ஆகிய இரண்டு மகன்களும் உள்ளனர்.

சம்பவத்தன்று இரவு மூத்த மகன் வினித் வீட்டில் டி.வி. பார்த்துக் கொண்டு இருந்தார். அப்போது மது குடித்து விட்டு வாசலில் அமர்ந்திருந்த ரமேசுக்கு சாப்பாடு கொடுத்து விட்டு வீட்டின் பின்புறம் காய வைத்த துணிகளை செல்வி எடுத்துக் கொண்டு இருந்தார். அப்போது வீட்டின் பின்புறம் சென்ற ரமேஷ், தனது மனைவி செல்வியை படுக்கைக்கு வர அழைத்ததாக கூறப்படுகிறது.



அதற்கு வினித், சாப்பிடாமல் டி.வி. பார்த்துக் கொண்டிருக்கிறான். அவனுக்கு சாப்பாடு கொடுக்க வேண்டும் என்று கூறியுள்ளார். ஆனாலும் ரமேஷ் தொடர்ந்து செல்வியை படுக்கைக்கு வர வற்புறுத்தியதாகவும், அதற்கு செல்வி மறுப்பு தெரிவித்ததாகவும் கூறப்படுகிறது. இதனால் ஆத்திரம் அடைந்த ரமேஷ், செல்வியை கீழே தள்ளி பலாத்காரம் செய்ய முயன்று உள்ளார். இதனால் செல்வி கூச்சலிட்டார்.

இதனால் மேலும் ஆத்திரம் அடைந்த ரமேஷ், செல்வி கழுத்தில் அணிந்து இருந்த தாலி கயிற்றால் கழுத்தை இறுக்கி கொலை செய்து விட்டு அங்கிருந்து தப்பியோடி விட்டார். இந்த தகவலின் பேரில் வடபாதிமங்கலம் போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று செல்வியின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக திருவாரூர் அரசு மருத்துவ கல்லூரி ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர்.

இதுகுறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து மாவூர் ரெயில்வே கேட் அருகே பதுங்கி இருந்த ரமேசை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# ராமதாஸ் பிறந்தநாள் நிகழ்ச்சியை புறக்கணித்த அன்புமணி

சென்னை, ஜூலை 27

பாமக நிறுவனர் ராமதாஸ், அவரது மகனும் கட்சி தலைவருமான அன்புமணி இடையே மோதல் போக்கு நிலவுகிறது. கட்சியை தங்கள் கட்டுக்குள் கொண்டு வர வேண்டும் என்பதில் இருவரும் தீவிரமாக செயல்பட்டு வருகின்றனர். இதற்காக அன்புமணியின் ஆதரவாளர்களை ராமதாஸ் கட்சியை விட்டு நீக்கி வரும் நிலையில், மாவட்டம் தோறும் நிர்வாகிகளை சந்தித்து ஆலோசனைக் கூட்டத்தை அன்புமணி நடத்தி வருகிறார்.

இந்தநிலையில், அன்புமணி நடைபயணத்திற்கு அனுமதி காவல்துறை அனுமதி வழங்கிய நிலையில், தமிழக மக்கள் உரிமை மீட்புப் பயணத்தை அன்புமணி துவங்கி உள்ளார். திருப்போரூர் முருகன் கோயிலில் இருந்து தேர்தல் பிரச்சார நடைபயணத்தை துவக்கினார். அன்புமணியின் நடைபயணம் 100 நாள்கள் நடைபெற உள்ளது.



அன்புமணி நடைபயணத்திற்காக வைக்கப்பட்ட பேனர்களில் ராமதாஸ் பெயரில்லை.

ராமதாசின் வழியில் அவரது கனவுகளை நிறைவேற்றவே இந்த நடைபயணம். மக்களுக்கு உரிமையை தராக திமுக அரசை வீட்டுக்கு அனுப்பும் தொடக்கமே இந்த நடைபயணம் என்று அன்புமணி ராமதாஸ் பேசினார்.

இதனிடையே தமிழக அரசியலில் மூத்த தலைவரான பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் இன்று தனது 87வது பிறந்தநாளை கொண்டாடுகிறார். அவருக்கு முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின், அரசியல் கட்சியினர், பொதுமக்கள் உள்பட பல்வேறு தரப்பினரும் வாழ்த்து தெரிவித்தனர்.

இந்தநிலையில், பாமக நிறுவனர் ராமதாஸ் பிறந்த நாள் நிகழ்ச்சியை அன்புமணி ராமதாஸ் புறக்கணித்ததாக கூறப்படுகிறது. ஏற்கனவே தைலாபுரத்தில் கடந்த 24ம் தேதி மாலை நடைபெற்ற பாமக நிறுவனர் ராமதாஸ் சரஸ்வதியின் 60வது திருமண நாள் நிகழ்ச்சியை பாமக தலைவர் அன்புமணி சவுமியா குடும்பத்தினர் புறக்கணித்தது குறிப்பிடத்தக்கது. பாமக எனும் கட்சியின் அதிகார மையத்தை கைப்பற்றுவதில் ஏற்பட்ட போட்டி அரசியல், குடும்ப நிகழ்வுகளிலும் எதிரொலித்துள்ளது பாமக நிர்வாகிகள், தொண்டர்களிடையே சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

# நெல்லையில் கல்லூரி மாணவர்களிடம் பெண்கள் பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வு



திருநெல்வேலி ஜூலை 27

திருநெல்வேலி மாவட்ட எஸ்.பி. சிலம்பரசன் அறிவுறுத்தலின்படி, மாவட்ட காவல் துறையினர் கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு தொடர்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகின்றனர். அதன் ஒரு பகுதியாக மானூர் காவல் நிலைய சரகத்திற்குட்பட்ட பகுதியில் உள்ள மேலப்பிள்ளையார்குளம், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் மாணவ, மாணவியர்களுக்கு கல்லூரியின் முதல்வர் டாரதி முன்னிலையில், மானூர் போலீஸ் இன்ஸ்பெக்டர் சந்திரசேகரன் புகையிலை மற்றும் கஞ்சா போன்ற போதைப் பொருட்களை பயன்படுத்துவதால் ஏற்படும் தீங்குகள்குறித்து, மாணவர்கள் தனது அறியாமையால் சிலரின் தவறான நட்பு போன்ற பல காரணங்களால் போதை பழக்கம் ஏற்படுகிறது.

போதைப்பழக்கம் சமுதாயத்திற்கும் உடல் நலத்திற்கும் அழிவை தரக்கூடியது. போதைப் பொருட்களை பயன்படுத்துவதால் மூளையை மழுங்க செய்து சிந்திக்கும் திறனை அழித்துவிடும். எனவே போதைப் பொருட்களுக்கு அடிமையாகும் சூழலை தவிர்த்து ஆரோக்கியமான உடல், சமூகத்தை உருவாக்குவோம் என்று விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

மேலும் பெண்கள் பாதுகாப்பு குறித்து பெண்கள் பாதுகாப்பு இலவச எண்களான 181 மற்றும் காவலன் SOS குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

# எல்இடி டிவி வெடித்து தீ விபத்து காரணம் என்ன.?



சிவகங்கை, ஜூலை 27

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் அருகே ஒழுகமங்கலம் கிராமத்தில் வசித்து வருபவர் சிட்டு. கணவன் இறந்த நிலையில் தனது இரண்டு குழந்தைகளோடு வசித்து வருகிறார்.

இந்நிலையில் இவர் வீட்டில் உள்ள எல்இடி டிவி திடீரென வெடித்தது. இதனால் தீவிபத்து ஏற்பட்டது.

தகவலறிந்து வந்த தீயணைப்புதுறையினர் தீயை அணைத்தனர்.

இந்த தீ விபத்தில் அலமாரியில் இருந்த துணிகள் மற்றும் ஏனைய சாதனங்கள் என மூன்று லட்சம் மதிப்புள்ள பொருட்கள் எரிந்து சேதமானது. மின்கசிவு காரணமாக எல்இடி டிவி வெடித்ததாக கூறப்படுகிறது. மாதத்தவணை மூலம் வாங்கி ஒரு மாதமே ஆன நிலையில், டிவி வெடித்ததாகவும், மாற்று துணி கூட இல்லாமல் சிரமப்படுவதால் இழப்பீடு வழங்கி உதவி செய்ய வேண்டும் எனவும் அந்த பெண் தமிழக அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

# 21 மாணவிகளுக்கு பாலியல் தொல்லை ஆசிரியர் மீது குண்டாஸ் பாய்ந்தது

நீலகிரி, ஜூலை 27

நீலகிரி மாவட்டம் கோத்தகிரி அருகில் உள்ள ஹோப் பார்க் பகுதியை சேர்ந்தவர் செந்தில்குமார் (50). இவர் 23 ஆண்டுகளாக அறிவியல் ஆசிரியராக தமிழகம் முழுவதும் உள்ள பல்வேறு அரசுப் பள்ளிகளில் பணியாற்றி உள்ளார். இந்நிலையில் கடந்த ஆண்டு ஜூன் மாதம் ஊட்டி அருகே உள்ள ஓர் அரசுப் பள்ளியில் பணியில் சேர்ந்தார். இவர் அந்தப் பள்ளியில் 6 வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை அறிவியல் பாடம் எடுத்து வருகிறார்.

இந்நிலையில் அந்த அரசுப் பள்ளிக்கு பாலியல் கல்வி குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக போலீசார் சென்றனர். அப்போது உடலில் நல்ல தொடுதல், (good touch) கெட்ட தொடுதல் (bad touch) குறித்து மாணவ மாணவிகளுக்கு விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

பயிற்சி வகுப்பு முடிந்ததும் பள்ளியில் இருந்த 6ம் வகுப்பு படிக்கும் 12 வயது மாணவி ஒருவர் அறிவியல் ஆசிரியர் செந்தில்குமார், உடலில் தகாத இடத்தில் தொட்டு பாலியல் தொல்லை கொடுத்ததாக புகார் கூறினார். இதேபோல் பல மாணவிகளும் ஆசிரியர் செந்தில்குமார் தங்களின் மார்புப் பகுதி மற்றும் உடலின் பின்புறம் உள்பட பல இடங்களில் தொட்டு பாலியல் தொல்லை கொடுத்துள்ளார் என்றனர்.



மேலும் ஒரு சில நேரங்களில் மாணவிகளுக்கு அவர் முத்தம் கொடுத்ததாகவும் கூறப்படுகிறது. முடிவில் பள்ளியில் படித்த 21 மாணவிகள் செந்தில்குமார் மீது பாலியல் தொந்தரவு புகார் அளித்தனர். இதனால் அதிர்ச்சி அடைந்த போலீசார் இதுகுறித்து உயர் அதிகாரிகளுக்கும், குழந்தைகள் நலப்பிரிவு அதிகாரிகளுக்கும் தகவல் தெரிவித்தனர். இதன் பேரில் ஊட்டி ஊரக ஆய்வாளர் விஜயா தலைமையிலான போலீஸார் விசாரணை நடத்தி போக்சோ சட்டத்தில் வழக்குப்பதிவு செய்து செந்தில்குமரை கைது செய்து கோவை மத்திய சிறையில் அடைத்தனர்.

இந்நிலையில், போக்சோ வழக்கில் கைதாகியுள்ள ஆசிரியர் செந்தில்குமார், நீலகிரி ஆட்சியரின் பரிந்துரையின் கீழ் குண்டர் தடுப்பு சட்டத்திலும் கைது செய்து நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டுள்ளார். இதனையடுத்து ஆசிரியர் செந்தில்குமார் மீது குண்டாஸ் சட்டம் பாய்ந்தது.

குண்டாஸ் சட்டம் என்பது குண்டர் சட்டம் ஆகும் 1982ம் ஆண்டு எம்ஜிஆர் ஆட்சிக்காலத்தில் கொண்டு வரப்பட்டது. நகர்ப்புறங்களில் காவல் துறை ஆணையரும், கிராமப்புறங்களில் மாவட்ட ஆட்சியரும் இந்தச் சட்டத்தை செயல்படுத்த அதிகாரம் கொண்டவர்கள்.

இந்த சட்டத்தின்படி ஒருவர் கைது செய்யப்பட்டால், அவர் 12 மாதங்கள் தொடர்ந்து சிறையில் அடைக்க முடியும். அவரிடம் எந்தவித விசாரணையும் மேற்கொள்ளத் தேவையில்லை, அவர்களுக்கு பிணையும் வழங்கப்படாது. அவர்களை விடுவிப்பது குறித்து மாநில அரசு முடிவு செய்தால், முன்கூட்டியே விடுவிக்கவும் சட்டத்தில் இடமுள்ளது.

அதேநேரத்தில் குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, நிபந்தனைகளுடன் விடுவிக்கப்பட்ட நபர், அவருக்கு விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை மீறினால், அவருக்கு இரண்டு ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை வழங்கலாம் என்றும் சட்டத்தின்ஷரத்து கூறுகிறது.

# புதுக்கோட்டையில் அண்ணன், தம்பி வெட்டிக்கொலை போலீசார் குவிப்பு

புதுக்கோட்டை, ஜூலை 27

புதுக்கோட்டை மாவட்டம் ஆவுடையார்கோவில் அருகே உள்ள காமராஜபுரம் பகுதியை சேர்ந்த அண்ணன், தம்பி அரிவாளால் வெட்டி படுகொலை செய்யப்பட்டனர். இது குறித்து தகவல் அறிந்த ஆவுடையார்கோவில் போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்றனர். மேலும்மாவட்டபோலீஸ் சூப்பிரண்டு அபிஷேக் குப்தா சம்பவ இடத்திற்கு சென்று விசாரணை நடத்தினார்.

போலீசாரின் முதற்கட்ட விசாரணையில், கொலை செய்யப்பட்டவர்கள் அதே பகுதியை சோ'ந்த கண்ணன் (வயது 35), கார்த்திக் (29) என்பது தெரியவந்தது. இதையடுத்து அவர்களுடைய உடலை போலீசார் கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக ஆவுடையார் கோவில் அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். அவர்கள் 2 பேரும் கொலை செய்யப்பட்டதற்கான காரணம் என்ன? அவர்களை கொலை செய்தது யார்? என்பது குறித்த விவரம் உடனடியாக தெரியவில்லை. இது குறித்து போலீசார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.




அண்ணன்தம்பி வெட்டிக் கொலை செய்யப்பட்ட சம்பவம் நேற்று இரவு அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. பாதுகாப்பு பணிக்காக ஏராளமான போலீசார் குவிக்கப்பட்டனர்.

# சிறுமிக்கு பாலியல் தொல்லை: முதியவருக்கு 7 ஆண்டுகள் சிறை தண்டனை

தஞ்சாவூர், ஜூலை 27

தஞ்சாவூர் அருகே கீழ வஸ்தாசாவடி பெரிய புதுப்பட்டினத்தைச் சேர்ந்தவர் முத்துசாமி (63). இவர் கடந்த 2023ம் ஆண்டில் 6 வயது சிறுமிக்கு பாலியல் தொந்தரவு கொடுத்ததாக பாபநாசம் அனைத்துமகளிர்போலீஸ் நிலையத்தில் சிறுமியின் தாய் புகார் செய்தார். இதைத் தொடர்ந்து, போலீசார் போக்சோ சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்து முத்துசாமியை கைது செய்தனர்.



இது தொடர்பாக தஞ்சாவூர் போக்சோ சிறப்பு கோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டது. இந்தவழக்கை நீதிபதி ஜெ. தமிழரசி விசாரித்து, முத்துசாமிக்கு 7 ஆண்டுகள் சிறை தண்டனையும், ரூ.10 ஆயிரம் அபராதமும் விதித்து தீர்ப்பளித்தார். அபராதத்தை கட்டத்தவறினால்மேலும் 6 மாத சிறை தண்டனையும் விதித்தார்.

# தூத்துக்குடி பனிமய மாதா ஆலய திருவிழா: கொடியேற்றத்துடன் தொடக்கம்

தூத்துக்குடி, ஜூலை 26

தூத்துக்குடி தூய பனிமய மாதா ஆலயத்தில் 443 வது ஆண்டு பெருவிழா இன்று (சனிக்கிழமை) கொடியேற்றத்துடன் தொடங்குகிறது. இதனை முன்னிட்டு நேற்று மாலை 5 மணிக்கு பேராலயத்தில் சிறப்பு திருப்பலி நடந்தது. தொடர்ந்து 6 மணியளவில் திருச்சிலுவை சிற்றாலயம் முன்பிருந்து தூத்துக்குடி மறைவட்ட முதன்மை குரு பென்சன் தலைமையில் கொடி பவனி தொடங்கியது. இதில் பேராலயம் முன்புள்ள கொடிமரத்தில் இன்று காலை ஏற்றப்படவுள்ள அன்னையின் திருவுருவம் பொறிக்கப்பட்ட கொடியை பக்தர்கள் பவனியாக எடுத்துச் சென்றனர். மேலும், நேர்ச்சையாக கொடிகளை காணிக்கை செலுத்துவோர் கொடிகளை கைகளில் ஏந்தி சென்றனர். அதுபோல பக்தர்கள் கல்வி உபகரணங்கள், ஏழைகளுக்கு வழங்கக்கூடிய பொருட்கள் உள்ளிட்ட பல்வேறு காணிக்கை பொருள்களையும் பவனியாக கொண்டு சென்றனர்.



இந்த பவனி செயின்ட் பீட்டர் தெரு, மணல் தெரு உள்ளிட்ட வீதிகள் வழியாக தூய பனிமய மாதா ஆலயத்தை சென்றடைந்தது. அங்கு பாதிரியார்கள் கொடிகள் மற்றும் காணிக்கைகளை பெற்றுக் கொண்டு மக்களை ஆசீர்வதித்தனர்.

இதன் தொடர்ச்சியாக இன்று(சனிக்கிழமை) காலை கொடியேற்றம் நடக்கிறது. காலை 7 மணிக்கு தூத்துக்குடி மறைமாவட்ட பிஷப் ஸ்டீபன் தலைமையில் கூட்டுத் திருப்பலி நடக்கிறது. இந்த திருப்பலி முடிந்ததும் கொடியேற்றம் நடக்கிறது. விழாவில் வருகிற 3ந் தேதி நற்கருணை பவனியும், 4ந் தேதி இரவு 9 மணிக்கு ஆலய வளாகத்தில் அன்னையின் திருவுருவ பவனியும், 5ந் தேதி நகர வீதிகளில் அன்னையின் திருவுருவ பவனியும் நடக்கிறது.

# தமிழகத்தில் மத வழிபாட்டுத் தலங்களுக்கு மின் கட்டணத்தில் பாகுபாடு? தமிழக அரசு விளக்கம்

சென்னை ஜூலை 27

தமிழகத்தில் மத வழிபாட்டுத் தலங்களுக்கு தமிழக அரசு மின் கட்டணத்தில் பாகுபாடு காட்டுவதாக இந்து மக்கள் கட்சி தலைவர் அர்ஜூன் சம்பத் தனது சமூக தலைத்தளத்தில் பதிவிட்டிருந்தார். இதனை பலரும் பகிர்ந்து வருகின்றனர். இதுதொடர்பாக தமிழக அரசின் அதிகார பூர்வ சமூக ஊடக கணக்கான தகவல் சரிபார்ப்பகம் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:



இது கடந்த 2019ம் ஆண்டில் இருந்தே பரப்பப்படுகிறது. கோவில்கள், மசூதிகள், தேவாலயங்கள் என பொது வழிபாட்டு தலங்கள் அனைத்தும் 'பொது வழிபாட்டு தலங்கள்' என்றே வகைப்படுத்தப்படுகின்றன. இவை அனைத்திற்கும் ஒரே மாதிரியான மின் கட்டணமே நிர்ணயிக்கப்படுகிறது.


2024ம் ஆண்டு கட்டண விதிப்பின்படி, கோவில், மசூதி மற்றும் தேவாலயம் உள்ளிட்ட பொது வழிபாட்டுத் தலங்களுக்கு ஒரு யூனிட்டுக்கு ரூ. 6.20 நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில், முதல் 120 யூனிட்டுக்கு அரசு மானியமாக ஒரு யூனிட்டுக்கு ரூ.3.13 மானியம் அளிக்கிறது. வதந்தியை பரப்ப வேண்டாம். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சிகிச்சை, பரிசோதனைகள் நிறைவு: முதல்வர் மு.க.ஸ்டாலின் வீடு திரும்புகிறார்

சென்னை, ஜூலை 26

முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் கடந்த 21ந்தேதி நடைபயிற்சியில் ஈடுபட்டபோது, அவருக்கு திடீரென தலைசுற்றல் ஏற்பட்டது. இதையடுத்து, அவர் சென்னை ஆயிரம் விளக்கு பகுதியில் உள்ள அப்பல்லோ ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

அங்கு, அவருக்கு தலைசுற்றலுக்கான காரணம் தொடர்பாக பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. தொடர் சிகிச்சையில் இருந்த போதிலும், ஆஸ்பத்திரியில் இருந்தவாறே முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் அரசு பணிகளை மேற்கொண்டார்.



இதற்கிடையில், முதல் அமைச்சருக்கு இதயத்துடிப்பில் சில வேறுபாடுகள் இருந்தது கண்டறியப்பட்டது. பின்னர், ஆஞ்சியோகிராம் பரிசோதனையும் மேற்கொள்ளப்பட்டதாகஅப்பல்லோ ஆஸ்பத்திரி நிர்வாகம் அறிக்கை வெளியிட்டது.

முதல் அமைச்சர் நலமுடன் இருப்பதாகவும், அவர் தனது வழக்கமான பணிகளை 2 நாட்களில் மேற்கொள்வார் என்றும் ஆஸ்பத்திரி நிர்வாகம் தெரிவித்தது.

அனைத்து பரிசோதனைகளும், சிகிச்சைகளும் நிறைவடைந்த நிலையில் அவர் உடல்நலத்துடன் இருப்பதாகவும், பூரண குணமடைந்து விட்டார் என்றும் மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதனால் நாளை (ஞாயிற்றுகிழமை) முதல் அமைச்சர்மு.க.ஸ்டாலின் வீடு திரும்புகிறார்.

# பிரதமர் மோடியின் வருகை தமிழ்நாட்டுக்கு பெருமை: அமைச்சர் தங்கம் தென்னரசு பேட்டி



சென்னை ஜூலை 26

சென்னையில் நிதி, சுற்றுச்சூழல் காலநிலை மாற்றம் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது:

சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத்தில் முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின்தலைமையிலான அரசு அதிக ஈடுபாடு காட்டி வருகிறது. அதன் தொடர்ச்சியாகத்தான் அலையாத்தி காடுகள் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

கங்கை கொண்ட சோழபுரம் ராஜேந்திர சோழன் உருவாக்கிய தலைநகர். அவருடைய காலத்தில் சோழகங்கம் என்று அழைக்கப்பட்ட ஏரி இப்போது பொன்னேரி என்று அழைக்கப்படுகிறது. ஏறத்தாழ 700 ஏக்கர் பரப்பளவில் அது இருக்கிறது. 1,374 ஏக்கர் பாசனப் பரப்பு இங்கு நடக்கிறது.

இந்த பாசன பகுதிகளுக்கும், விவசாயிகளுக்கும் பயன் தரும் வகையிலும், ஏரியை சுற்றுலா மையமாக உருவாக்கவும் ரூ.19.25 கோடி நிதியை ஒதுக்கியிருக்கிறார்கள். அதில் ஏறத்தாழ ரூ.12 கோடி ஏரியை உபரி நீர் வடிகால்வாய் சீரமைப்பு உள்ளிட்ட புனரமைப்பு பணிகளை மேற்கொள்ள செலவிடப்பட உள்ளது.

ராஜேந்திர சோழனின் கடல் கடந்த படையெடுப்பின் ஆயிரமாவது ஆண்டு விழாவை குறிக்கும் நிகழ்வுக்கு பிரதமர் மோடி இங்கு வர உள்ளார். அது தமிழ்நாட்டுக்கு கிடைக்கும் பெருமை.

இவ்வாறு அவர் கூறினார்.

# பைக் பெட்ரோல் டேங்கில் மனைவிகளை அமர வைத்து பயணம் செய்த வாலிபர்கள் வைரலாகும் வீடியோ

திருத்தணி, ஜூலை 26

இன்றைய இளம் வயதினர் ரீல்ஸ் மோகத்தால் தாங்கள் செல்லும் இடங்கள், செய்யும் சாகசங்கள் போன்றவற்றை புகைப்படம் மற்றும் வீடியோ எடுத்து சமூக வலைதளத்தில் வெளியிடுகின்றனர். இதில் கிடைக்கும் வரவேற்பிற்காக ஆபத்தான செயல்களிலும் பலர் ஈடுபடுகின்றனர்.

இந்த செயல்கள் சில நேரங்களில் அவர்களின் உயிருக்கே உலை வைத்து விடுகிறது.



அந்த வகையில் திருவள்ளூர் மாவட்டம் திருத்தணியில் வசிக்கின்ற வாலிபர்கள் இருவர் தங்கள் மனைவிகளை மோட்டார் சைக்கிளின் முன்பக்க பெட்ரோல் டேங்கின் மீது அமர வைத்து கொண்டு திருத்தணி அரக்கோணம் புறவழிச் சாலையில் அதிவேகமாகசென்று 'ரீல்ஸ்' வீடியோ எடுத்துள்ளனர். இந்த ரீல்ஸ் வீடியோ தற்போது சமூக வலைதளத்தில் வைரலாக பரவி வருகிறது.

# வீட்டுக்கு மின் இணைப்பு வழங்க ரூ.13 ஆயிரம் லஞ்சம் வாங்கிய மின்வாரிய அதிகாரி கைது



காஞ்சிபுரம் ஜூலை 27

காஞ்சிபுரம் மாவட்டம், ஆதனூர் பகுதியைச் சேர்ந்தவர் ராஜசேகர். இவர், அதே பகுதியில் புதிதாக வீடு கட்டி வருகிறார். இதற்காக தற்காலிக மின் இணைப்பு பெறுவதற்காக ஊரப்பாக்கத்தில் உள்ள மேற்கு மின் வாரிய அலுவலகத்தில் விண்ணப்பித்தார். விண்ணப்பித்து 4 மாதங்கள் ஆகியும் இவருக்கு தற்காலிக மின் இணைப்பு வழங்கப்படவில்லை.

இதுகுறித்து ஊரப்பாக்கம் மின் வாரிய அலுவலகத்தில் வணிக ஆய்வாளராக பணிபுரிந்து வரும் காட்டாங்கொளத்தூர் பகுதியைச் சேர்ந்த ஏழுமலை (55 வயது) என்பவரிடம் கேட்டார்.

அதற்கு ஏழுமலை ரூ.13 ஆயிரம் லஞ்சம் கொடுத்தால் உடனடியாக தற்காலிக மின் இணைப்பு வழங்கப்படும் என்று ராஜசேகரிடம் தெரிவித்துள்ளார்.

லஞ்சம் கொடுக்க விரும்பாத ராஜசேகர்,

இதுகுறித்து செங்கல்பட்டு லஞ்ச ஒழிப்புத்துறை போலீசாரிடம் புகார் அளித்தார். லஞ்ச ஒழிப்பு போலீசார் ரசாயன பவுடர் தடவிய ரூ.13 ஆயிரத்தை ராஜசேகரிடம் கொடுத்து, அதனை லஞ்சமாக கொடுக்கும்படி அறிவுறுத்தினர்.

அதன்படி ராஜசேகர் ஊரப்பாக்கம் மின்வாரிய அலுவலகத்திற்கு நேற்று மதியம் சென்று ஏழுமலையிடம் ரசாயனம் தடவிய ரூ.13 ஆயிரத்தைக் கொடுத்தார். அதனை ஏழுமலை வாங்கியபோது அங்கு மறைந்து இருந்த லஞ்ச ஒழிப்பு போலீசார் ஏழுமலையை கையும் களவுமாக பிடித்து கைது செய்தனர்.

# ஆட்சியில் பங்கு கேட்க மாட்டோம் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் உறுதி

ராமநாதபுரம் ஜூலை 26

ராமநாதபுரத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் பெ. சண்முகம் கூறியதாவது:

நாடாளுமன்ற கூட்டத்தொடர் நடைபெற்றுகொண்டிருக்கிறது. ஆனால்பிரதமர்மோடியோ இந்த தருணத்தில் வெளிநாட்டு சுற்றுப்பயணம் மேற்கொண்டிருப்பது கண்டிக்கத்தக்கது. மதுரை ஆதீனம் சில மாதங்களுக்கு முன்பாக அவரை கொல்வதற்காக ஒருவர் காரை ஓட்டி வந்ததாக உள்நோக்கத்துடன் ஒரு பேட்டியை கொடுத்திருந்தார். அவர் போலீசாரின் விசாரணைக்கு ஒத்துழைக்காமல் கோர்ட்டு உத்தரவை மீறி உள்ளார். சட்டத்தின் முன் அனைவரும் சமம்.



அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி கட்சிகளை கூட்டணிக்கு அழைத்து யாரும் வரவில்லை என்பதால் ஒவ்வொரு நாளும் மாற்றி மாற்றிப் பேசி கொண்டிருக்கிறார். பா.ஜ.க.வுடன் அ.தி.மு.க. அணி சேர்ந்திருக்கும் வரையிலும், அவர்களுடன் கூட்டணி வைக்க யாரும் தயாராக இல்லை. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தலைமையில் ஆட்சி அமைந்தால் தவிர, வேறு எந்த கட்சி தலைமையிலான ஆட்சியிலும் நாங்கள் பங்கு கேட்க மாட்டோம். இவ்வாறு அவர் கூறினார்.

# பொதிகை எக்ஸ்பிரஸ் ரெயில் தடம் புரண்டது



சென்னை, ஜூலை 26

சென்னை எழும்பூர் ரெயில் நிலையத்தில் இருந்து செங்கோட்டைக்கு தினசரி பொதிகை எக்ஸ்பிரஸ் ரெயில் இயக்கப்பட்டு வருகிறது. இந்த ரெயில், எழும்பூரில் இருந்து இரவு 8.10 மணிக்கு புறப்பட்டு, மறுநாள் காலை செங்கோட்டையைவந்துசேரும். எழும்பூர்ரெயில்நிலையத்தில் இடம் இல்லாததால், இந்த ரெயில் செங்கல்பட்டு ரெயில் நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டு பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுவது வழக்கம். அதன் பின்னர், புறப்படுவதற்கு சில மணி நேரம் முன்பாக எழும்பூரில் நிறுத்தி வைக்கப்படும். அதன்படி, செங்கல்பட்டு ரெயில் நிலையத்தில் இருந்து காலிப்பெட்டிகளுடன் எழும்பூர் நோக்கி புறப்பட்ட பொதிகை எக்ஸ்பிரஸ் ரெயில், தடம் புரண்டு விபத்துக்குள்ளானது. முதற்கட்ட அறிக்கைகளின்படி, தண்டவாளங்களில் சக்கர பெட்டிகளை மறுசீரமைப்பு செய்யும் போது ஒரு ஆபரேட்டரின் மேற்பார்வை தவறால் இது நடந்ததாக ரெயில்வே வட்டாரங்களில் இருந்து தகவல் வந்துள்ளது. தடம் புரண்ட ரெயிலை சக்கரத்தை மீண்டும் தண்டவாளத்தில் நிறுத்தும் பணிகள் விரைவாக மேற்கொள்ளப்பட்டது. இந்த விபத்து காரணமாக, இரவு 8.10 மணிக்கு புறப்பட்ட வேண்டிய ரெயில், 2 மணி நேரம் தாமதமாக 10.10 மணிக்கு புறப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த விபத்து காரணமாக, தென் மாவட்டங்களுக்கு செல்லும் சில ரெயில்கள் தாமதமாக இயக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

# உடல் எடையை குறைக்க ஆன்லைன் டயட்.. மாணவனுக்கு நேர்ந்த விபரீதம்

குளச்சல், ஜூலை 27

குமரி மாவட்டம் குளச்சல் அருகே உள்ள பர்ணட்டிவிளையை சேர்ந்தவர் நாகராஜன், சுங்கவரி துறையில் ஏட்டாக பணியாற்றி வருகிறார். இவருடைய மகன் சக்தீஷ்வர் (வயது17). இவர் பிளஸ்2 தேர்ச்சி பெற்று என்ஜினீயரிங் கல்லூரியில் சேர தயாராகி வந்தார்.

இந்தநிலையில் நேற்று காலையில் வீட்டில் இருந்த சக்தீஷ்வர் திடீரென மூச்சு திணறி மயங்கி கீழே விழுந்தார். உடனே அவரை பெற்றோர் மீட்டு அருகில் உள்ள மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர். அங்கு அவரை பரிசோதித்த டாக்டர்கள், அவர் ஏற்கனவே இறந்து விட்டதாக தெரிவித்தனர். இதுகுறித்து தகவல் அறிந்த குளச்சல் போலீசார் சம்பவ இடத்துக்கு வந்து பெற்றோரிடம் விசாரணை நடத்தினர். அப்போது திடுக்கிடும் தகவல் தெரிய வந்தது.

அதாவது மாணவன் சக்தீஷ்வர் உடல் பருமனால் அவதியுற்று வந்துள்ளார். தற்போது மேற்படிப்பிற்காக கல்லூரிக்கு செல்ல இருந்த நிலையில் உடல் பருமனை பார்த்து சக மாணவர்கள் கேலி, கிண்டல் செய்யலாம் என நினைத்துள்ளார். எனவே உடல் எடையை குறைக்கும் வழிமுறைகள் குறித்து யூடியூபில் தேடியுள்ளார். அதில் கிடைத்த தகவலின்படி கடுமையான உணவு கட்டுப்பாடுகளை கடைபிடித்து வந்துள்ளார்.

அதாவது கடந்த 3 மாதங்களாக திட உணவு சாப்பிடாமல் பழச்சாறு மட்டும் குடித்து உடற்பயிற்சி செய்து வந்துள்ளார். தொடர்ந்து பழச்சாறு குடித்து வந்ததால் சளித் தொல்லைக்கு ஆளாகி மூச்சு விட சிரமப்பட்டு உள்ளார். இந்தநிலையில் நேற்று காலையில் அதிக சளி தொல்லையால் மூச்சு திணறல் ஏற்பட்டு மயங்கி விழுந்து இறந்தது தெரிய வந்தது.

இதனையடுத்து உடலை போலீசார் கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக ஆசாரிபள்ளம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இதுதொடர்பாக போலீசார் கூறும்போது, உடல் பருமனை குறைக்க முறையாக அங்கீகாரம் பெற்ற சிறப்பு டாக்டர்களை அணுகி அவர்களின் பரிந்துரை அடிப்படையில் மட்டுமே உடல் பயிற்சி உள்ளிட்ட முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்றனர். இதற்கிடையே இறந்த மாணவரின் இரு கண்களையும் பெற்றோர் தானம் செய்தனர்.

இந்நிலையில் ஆலோசனையின்றி டயட் முறையை பின்பற்ற கூடாது என டாக்டர்கள் அறிவுறுத்தி உள்ளனர்.

# தணிக்கைத் துறைகள் சுதந்திரமாக செயல்பட வழிவகுக்க வேண்டும்: ஓ.பன்னீர்செல்வம் வலியுறுத்தல்

சென்னை, ஜூலை 26

தமிழ்நாடு முன்னாள் முதல்அமைச்சர் ஓ. பன்னீர்செல்வம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:



ஆட்சியில் இல்லாதபோது சமூக நீதி, வேலைவாய்ப்பு, தொழிலாளர் நலன் எனப் பேசும் தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகு அவற்றிற்கு முற்றிலும் முரணான நடவடிக்கைகள் எடுப்பதை வாடிக்கையாக கொண்டுள்ளது. அந்த வகையில், தணிக்கைத் துறைகளின் செயல்பாட்டை நீர்த்துப் போகச் செய்யும் நடவடிக்கைகளை தி.மு.க. அரசு எடுத்து வருகிறது.

தி.மு.க. ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னர் வெளியிடப்பட்ட நிதித்துறை அரசாணை எண். 102 நாள் 07042022ன்படி, தணிக்கை தலைமை இயக்குநர் பதவி உருவாக்கப்பட்டு அதற்கான நெறிமுறைகளும், வரையறைகளும் வகுக்கப்பட்டன. மேற்படி ஆணையின்படி, உள்ளாட்சி நிதித் தணிக்கை கூட்டுறவு தணிக்கை, பால் கூட்டுறவுகளின் தணிக்கை, மாநில அரசு தணிக்கை, இந்து சமய நிறுவனங்களின் தணிக்கை உள்ளிட்ட தணிக்கைத் துறைகளை தணிக்கை தலைமை இயக்குநர் மேற்பார்வையிட வேண்டும். இது தவிர, தனியார் துறையில் நல்ல அனுபவம் உள்ளவரையும் தணிக்கை தலைமை இயக்குநராக நியமிக்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. அப்போதே. இந்த ஆணைக்கு எதிர்ப்பு தெரிவித்து நான் அறிக்கை வெளியிட்டு இருந்தேன். ஆனால், தி.மு.க. அரசு இதனைக் கண்டு கொள்ளவில்லை. இதன் விளைவு இன்றைக்கு தணிக்கைத் துறை பல்வேறு குளறுபடிகளை சந்தித்து வருகிறது.

முதலில் தலைமை தணிக்கைத் துறை இயக்குநர் பதவிக்கு இந்திய கணக்குத் தணிக்கை அலுவலர் நியமிக்கப்பட்டதாகவும், அவருடைய காலத்தில் நடைமுறைகளில் தாமதங்கள், தணிக்கைத் தடைகளுக்கு பொறுப்பான அலுவர்கள் ஓய்வு பெறுவதில் தாமதங்கள் ஏற்பட்டதன் காரணமாக அவர் பதவி விலகியதாகவும், இதனைத் தொடர்ந்து இந்தப் பொறுப்பினை நிதித் துறை கூடுதல் செயலாளர் கவனித்து வருவதாகவும், இவர் ஆய்வுக் கூட்டம் என்ற பெயரில் தணிக்கைத் துறையில் உள்ள உயர் அலுவர்களை நாகரிகமற்ற வார்த்தைகளில் திட்டுவதை வாடிக்கையாக கொண்டுள்ளார் என்றும், ஒவ்வொரு தணிக்கைத் துறைக்கும் அந்தந்த துறையிலிருந்தே மூத்த அதிகாரிகள் இயக்குநராக நியமனம் செய்யப்படலாம் என்ற நிலை இருந்தும், நிதித் துறை அதிகாரிகளே இயக்குநர் பதவியில் நியமிக்கப்படுவதாகவும், இதனால் அந்தந்த துறைகளில் பணியாற்றுபவர்களுக்கு பதவி உயர்வு வாய்ப்பு பறிபோவதாகவும், தணிக்கைத் துறைகளில் ஆட்குறைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும், தணிக்கைத் தடைகளுக்கு பொறுப்பான அலுவலர்கள் தடைகள் நீக்கம் செய்யப்பட்ட பின்னரே ஓய்வு பெற அனுமதிக்கப்படும் நிலையில் தணிக்கைத் தடைகளை நீக்கம் செய்யும் அதிகாரம் அந்தந்த துறை அலுவலர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது ஊழலுக்கு வழிவகுக்கும் என்றும், உயர் மட்டக் குழு என்ற பெயரில் முறைகேடுகள் மூடி மறைக்கப்படுகின்றன என்றும் தணிக்கைத் துறைகளில் பணிபுரியும் அலுவலர்கள் தெரிவிக்கின்றனர்.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தில் மேற்கொண்டு வந்த தணிக்கை இந்த அரசால் கைவிடப்பட்டுள்ளதாகவும், அவசர கோலத்தில் அறிமுகம் செய்யப்பட்ட கணினி வழி நடைமுறையின் காரணமாக 400 கிலோ மீட்டர் தூரம் பயணம் செய்து தணிக்கை மேற்கொள்ள வேண்டிய அவல நிலை உள்ளதாகவும், கூட்டுறவுத் தணிக்கைத் துறையில் ஆண்டுக் கணக்குகள் இல்லாமலேயே தணிக்கைப் பணியை தொடங்குமாறு தணிக்கையாளர்கள் நிர்பந்தப்படுத்தப்படுவதாகவும், உதவி இயக்குநர் பணியிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளதாகவும், அனைத்துத் தணிக்கைத் துறைகளையும் ஒருங்கிணைத்து பணியிடங்களை குறைக்கும் நடவடிக்கையில் தி.மு.க. அரசு ஈடுபட்டுள்ளதாகவும் தணிக்கைத்துறைகளில் பணிபுரிவோர் தெரிவிக்கின்றனர்.

மொத்தத்தில் தணிக்கைத் துறைகளின் செயல்பாட்டினைக் குறைப்பதிலும், வேலைவாய்ப்பின்மையை அதிகரிப்பதிலும், முறைகேடுகளை மூடி மறைப்பதிலும் தி.மு.க. அரசு கவனம் செலுத்துவது தெள்ளத் தெளிவாகிறது. இது கடும் கண்டனத்திற்குரியது.

முதல்அமைச்சர் இதில் தனிக் கவனம் செலுத்தி தணிக்கைத் துறைகள் சுதந்திரமாக செயல்படவும், அங்கு பணிபுரிவோருக்கு பதவி உயர்வுகளை வழங்கவும், தணிக்கைப் பயண நேரத்தை குறைக்கவும், முறைகேடுகளை வெளிச்சத்திற்கு கொண்டு வரவும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அண்ணா திராவிட முன்னேற்றக் கழக தொண்டர்கள் உரிமை மீட்புக் குழுவின் சார்பில் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

தினகனி

Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253

27.7.2025

# பௌத்தர்கள் புனித பயணம்: அரசு நிதியுதவி பெற விண்ணப்பிக்கலாம் தூத்துக்குடி கலெக்டர் தகவல்




தூத்துக்குடி ஜூலை 26

தூத்துக்குடி மாவட்ட கலெக்டர் இளம்பகவத் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

தமிழ்நாட்டைச் சேர்ந்த 150 பௌத்த நபர்களுக்கு தமிழ்நாடு அரசால் 2025 26ம் ஆண்டில் நாக்பூர் தீக்ஷா பூமியில் விஜய தசமி அன்று நடைபெறும் தம்ம சக்கர பரிவர்தன திருவிழாவிற்கு புனித பயணம் மேற்கொண்டு திரும்பியவர்களுக்கு ECS முறையில் நபர் ஒருவருக்கு அதிகபட்சமாக ரூ.5,000 வரை நேரடியாக மானியம் வழங்கும் திட்டத்தின் கீழ் பயணம் மேற்கொண்டு பயன்பெற விரும்பும் பௌத்தர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

இதற்கான விண்ணப்ப படிவத்தினை மாவட்ட கலெக்டர் அலுவலகங்களில் இயங்கும் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகம்/ சிறுபான்மையினர் நல அலுவலகங்களிலிருந்து கட்டணமின்றி பெறலாம். மேலும் www.bcmbcmw.tn.gov.in என்ற இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தினை 30.11.2025க்குள் உரிய ஆவணங்களுடன் அனுப்ப வேண்டிய முகவரி: ஆணையர், சிறுபான்மையினர் நலத்துறை, கலசமஹால் பாரம்பரிய கட்டடம், முதல் தளம், சேப்பாக்கம், சென்னை 600 005 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# நடப்பாண்டில் 4வது முறையாக நிரம்பிய மேட்டூர் அணை



சேலம், ஜூலை 26

சேலம் மாவட்டம் மேட்டூர் அணை நடப்பாண்டில் நான்காவது முறையாக நிரம்பியதைத் தொடர்ந்து இன்று மாலை 16 கண் மதகுகள் வழியாக மீண்டும் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. இதனால் மேட்டூர் வருவாய் துறை சார்பில் காவிரி கரையோர மக்களுக்கு ஒலிபெருக்கி மூலம் வெள்ள அபாய எச்சரிகை விடுத்து வருகின்றனர்.

மேட்டூர் அணையின் 16 கண் மதகு அருகே உள்ள தங்கமாபுரி பட்டினம், அண்ணா நகர் பெரியார் நகர், சேலம் கேம்ப் உள்ளிட்ட பகுதிகளில் ஒலிபெருக்கி மூலமாக பொதுமக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

# இன்றைய ராசி பலன்கள் (27.7.2025)

மேஷம்: புதிய தொடர்புகள் உருவாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படும். பணியில் பாராட்டுகள் கிடைக்கும்.

ரிஷபம்: அதிக உணர்ச்சிப்பூர்வமான நாள். உடல்நலத்தைக் கவனிக்கவும். தவறான முடிவுகள் தவிர்க்க வேண்டியது அவசியம்.

மிதுனம்: தினம் சாதகமாக இருக்கும். புதிய வாய்ப்புகள் வந்து சேரும். வெளியூர் பயணம் சாத்தியம்.

கடகம்: நட்பு வட்டத்தில் சிக்கல்கள் ஏற்படக்கூடும். செலவுகள் அதிகரிக்கலாம். பொறுமையாக செயல்படுங்கள்.

சிம்மம்: பழைய கடன்கள் அடைப்பு வாய்ப்பு. தாமதம் ஆன வேலைகள் நிறைவேறும். குடும்பத்தில் சந்தோஷம். அதிர்ஷ்ட எண்: 1

கன்னி: வேலை தொடர்பான முக்கிய முடிவுகள் எடுக்கும் நாள். மற்றவர்களை நம்பி தவறு செய்ய வேண்டாம்.

துலாம்: உத்தியோகத்தில் முன்னேற்றம். உள்சஞ்சாரம் அதிகம் இருக்கும். சகோதரர் உதவியால் நன்மை ஏற்படும்.

விருச்சிகம்: திடீர் செலவுகள் வரக்கூடும். தொழில் அல்லது வியாபாரத்தில் கவனம் தேவை. தாமதமாக செயல்பட வேண்டாம்.

தனுசு: விழாக்கள், நிகழ்வுகளில் பங்கேற்பீர்கள். குடும்ப உறவுகளில் மகிழ்ச்சி அதிகரிக்கும். செல்வாக்கு உயரும்.

மகரம்: அதிக உழைப்பால் வெற்றி. சிந்தித்து செயல்படுவது அவசியம். அன்பான வார்த்தைகள் பெரிய விஷயங்களை சாதிக்கச் செய்யும்.

கும்பம்: நண்பர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும். மனநிலை சமநிலையாக இருக்கும். புதிய ஆர்வங்கள் பிறக்கும்.

மீனம்: புதிய திட்டங்கள் தொடங்கலாம். குடும்பத்தில் மகிழ்ச்சி மேலோங்கும். வருமானம் மேம்படும்.

# தூத்துக்குடியில் பள்ளி பெயரில் சாதி அடையாளத்தை நீக்க உத்தரவு




சென்னை ஜூலை 26

தூத்துக்குடி, காந்திநகர் பகுதியில் இந்து அரிசன தொடக்கப்பள்ளி செயல்பட்டு வருகிறது. அரசு உதவி பெறும் இந்த பள்ளியின் பெயரில் உள்ள 'அரிசன' எனும் சாதி பெயரை நீக்க கல்வித் துறைக்கு உத்தரவிடக் கோரி பள்ளி தலைவர், செயலாளர் உள்ளிட்டோர் சென்னையில் உள்ள தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் ஆணையத்தில் மனு தாக்கல் செய்தனர்.

அந்த மனுவில் அவர்கள், சாதி பெயரில் பள்ளிகள் செயல்படக்கூடாது என மதுரை ஐகோர்ட்டு கிளை ஏற்கெனவே உத்தரவிட்டிருப்பதாக சுட்டிக்காட்டி இருந்தனர்.

இந்த நிலையில் மனுவை விசாரித்த ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் ஆணையத்தின் தலைவர், நீதிபதி தமிழ்வாணன், உறுப்பினர் ஆனந்தராஜா ஆகியோர் தூத்துக்குடி இந்து அரிசன தொடக்கப் பள்ளியின் பெயரில் சாதியை அடையாளப்படுத்தும் வகையில் உள்ள 'அரிசன' என்றவார்த்தையை நீக்க வேண்டும் என தொடக்கக்கல்வி இயக்குனருக்கு உத்தரவிட்டனர். மேலும், வருகிற சுதந்திர தினத்துக்கு முன்பாக இதனை செயல்படுத்தி அதுதொடர்பான அறிக்கையை ஆகஸ்டு 11ம் தேதிக்குள் தொடக்கக் கல்வி இயக்குனர் தாக்கல் செய்யவும் உத்தரவு பிறப்பித்தனர்.

# ராமநாதபுரம்: டிராக்டர் கவிழ்ந்து விபத்து: 3 பெண்கள் பரிதாப பலி



ராமநாதபுரம், ஜூலை 26

ராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் அருகே பொதிகுளம் கிராமத்தில் உள்ள ரேஷன் கடைக்கு கூவர்கூட்டம் கிராமத்தை சேர்ந்த பொதுமக்கள்ரேஷன்பொருட்களை வாங்க வந்துள்ளனர். அதில் 11 பெண்கள், 2 ஆண்கள் ரேஷன் பொருட்கள் வாங்க டிராக்டரில் வந்திருந்தனர்.

இந்த நிலையில் ரேஷன் பொருட்களை வாங்கிக் கொண்டு திரும்பும் போது, டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்த டிராக்டர், பொதிகுளம் கிராமம் அருகே கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் பொன்னம்மாள்(60), ராக்கி (65), முனியம்மாள்(65) ஆகிய 3 பேர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர்.

விபத்தில் காயமடைந்த 10 பேர் முதுகுளத்தூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர். இவர்கள்அனைவரும்மேல்சிகிச்சைக்காகராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கும் மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனைக்கும் கொண்டு செல்லப்பட்டனர். டிராக்டர்கவிழ்ந்தவிபத்தில்மூன்றுபெண்கள்உயிரிழந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

இது குறித்து வழக்கு பதிவு செய்த போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# திருச்சி தாம்பரம் இடையே சிறப்பு ரெயில் சேவை நீட்டிப்பு



சென்னை, ஜூலை 26

தெற்கு ரெயில்வே திருச்சி தாம்பரம் இடையே சிறப்பு ரெயில் சேவையை முன்னதாக அறிவித்திருந்தது. அதன்படி திருச்சியில் இருந்து வரும் 29 முதல் ஜூன் 29ம் தேதி வரை, செவ்வாய், புதன், வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய நாட்களில், காலை 5:35 மணிக்கு புறப்படும் சிறப்பு ரெயில், அதே நாளில் நண்பகல் 12:30 மணிக்கு தாம்பரம் வந்தடையும்.

மறுமார்க்கத்தில் தாம்பரத்தில் இருந்து மேற்கண்ட நாட்களில், மாலை 3:45 மணிக்கு புறப்படும் சிறப்பு ரெயில், அதே நாளில் இரவு 10:40 மணிக்கு திருச்சி செல்லும் என தெற்கு ரெயிவே தெரிவித்திருந்தது.

இந்த நிலையில் இந்த சிறப்பு ரெயிலின் சேவையை மேலும் நீட்டிக்க உள்ளதாக தெற்கு ரெயிவே அறிவித்துள்ளது. அதன்படி 1.08.2025 முதல் 31.08.2025 வரை (மேலும் ஒரு மாதத்திற்கு) இந்த சிறப்பு ரெயில் சேவை நீட்டிக்கப்பட்டுள்ளது என தெற்கு ரெயில்வே தெரிவித்துள்ளது.

இந்த சிறப்பு ரயில்கள், தஞ்சாவூர்,கும்பகோணம், மயிலாடுதுறை, சிதம்பரம், விழுப்புரம், செங்கல்பட்டு வழியாக இயக்கப்படுகின்றன. இந்த சிறப்பு ரெயில்களுக்கான முன்பதிவு நாளை 8 மணி முதல் துவங்க உள்ளதும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# "இட்லி கடை" படத்தின் பர்ஸ்ட் சிங்கிள் புதிய போஸ்டரை வெளியிட்ட படக்குழு




தமிழ் சினிமாவில் இயக்குனராகவும், நடிகராகவும் வலம் வருபவர் தனுஷ். இவரது இயக்கத்தில் 4வது படமாக 'இட்லி கடை' உருவாகியுள்ளது. தனுஷே இயக்கி நடிக்கும் இத்திரைப்படத்திற்கு ஜி.வி.பிரகாஷ் இசையமைத்துள்ளார். டான் பிக்சர்ஸ் நிறுவனம் தயாரித்துள்ள இத்திரைப்படத்தில் ராஜ்கிரண், நித்யா மேனன், அருண் விஜய், சத்யராஜ், பார்த்திபன் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்கின்றனர். அருண் விஜய் இப்படத்தில் வில்லன் கதாப்பாத்திரத்தில் நடித்துள்ளார்.

எம்மாதிரியான கதைக்களத்துடன் இப்படம் இருக்கும் என மக்களிடம் எதிர்ப்பார்ப்பு நிலவி வருகிறது. இத்திரைப்படம் வரும் அக்டோபர் மாதம் 1ம் தேதி வெளியாக இருக்கிறது. படத்தின் ஆடியோ உரிமையை சரிகம இசை நிறுவனம் கைப்பற்றியுள்ளது.

இதற்கிடையில்'இட்லி கடை' படத்தின் பர்ஸ்ட் சிங்கிள் தனுஷின் பிறந்தநாளை முன்னிட்டு வரும் 27ம் தேதி (நாளை) வெளியாகும் என படக்குழு ஏற்கனவே அறிவித்திருந்தது. இந்த நிலையில், பர்ஸ்ட் சிங்கிள் குறித்த புதிய போஸ்டர் ஒன்றை படக்குழு வெளியிட்டுள்ளது.

# "ஹவுஸ் மேட்ஸ்" படத்தின் "மின்னலி" பாடல் புரோமோ வெளியீடு





பேண்டஸிஹாரர்காமெடி படமாக உருவாகி இருக்கும் 'ஹவுஸ் மேட்ஸ்'.கதையின் நாயகனாக தர்ஷன் நடித்திருக்கிறார் . இவருடன் மிக முக்கியமான கதாப்பாத்திரத்தில் காளி வெங்கட் நடித்திருக்கிறார். இவர்களுடன் இணைந்து அர்ஷா சாந்தினி பைஜூ , வினோதினி , தீனா , அப்துல் லீ , மாஸ்டர் ஹென்ரிக் ஆகியோர் முக்கிய வேடங்களில் நடித்திருக்கின்றனர்.ராஜவேல் எழுதி , இயக்கியுள்ளார். இத்திரைப்படத்தை விஜய பிரகாஷ் தயாரித்துள்ளார். இத்திரைப்படத்தை ப்ளே ஸ்மித் நிறுவனமும் சௌத் ஸ்டுடியோஸ் நிறுவனமும் இணைந்து தயாரித்துள்ளது.

இத்திரைப்படத்தை பார்த்த முன்னணி நடிகர் மற்றும் தயாரிப்பாளர் சிவகார்த்திகேயன் படக்குழுவை வாழ்த்தி, பாராட்டியுள்ளார். மேலும் இப்படத்தின் வெளியீட்டு உரிமையை கைப்பற்றி தனது தயாரிப்பு நிறுவனமான சிவகார்த்திகேயன் புரொடக்சன்ஸ் மூலம் உலகம் முழுவதும் வெளியிட உள்ளார்.

தர்ஷன் நடித்துள்ள 'ஹவுஸ் மேட்ஸ்' படத்தின் டிரெய்லர் சமீபத்தில் வெளியானது. இப்படம் ஆகஸ்ட் 1ம் தேதி வெளியாக உள்ளது.இப்படத்தின் பர்ஸ்ட் சிங்கிளான 'அக்கலு பக்கலு' பாடல் வெளியாகி வைரலானது. தணிக்கை வாரியம் 'ஹவுஸ் மேட்ஸ்' படத்திற்கு 'யு' சான்றிதழ் வழங்கியுள்ளது. மேலும் இப்படத்தின் ரன்னிங் டைமிங் 2 மணிநேரம் 9 நிமிடங்கள் கொண்டதாக இருக்கும் என்று படக்குழு அறிவித்துள்ளது.

இந்த நிலையில், 'ஹவுஸ் மேட்ஸ்' படத்தின் மின்னலி பாடலின் புரோமோ வெளியாகியுள்ளது. இதன் முழுமையான பாடல் வீடியோ நாளை மாலை 5 மணிக்கு வெளியாகுமென அறிவிக்கப்பட்டுள்ளது. .



# "கூலி" படத்தின் இசை வெளியீட்டு விழா தேதி அறிவிப்பு

நடிகர் ரஜினிகாந்த் மற்றும் இயக்குநர் லோகேஷ் கனகராஜ் கூட்டணியில் உருவாகி இருக்கும் திரைப்படம் 'கூலி'. இப்படத்திற்கு அனிருத் இசையமைத்துள்ளார். இந்தப் படத்தில் அமீர் கான், சத்யராஜ், நாகர்ஜுனா, சௌபின் ஷாஹிர், சுருதிஹாசன், பகத் பாசில், ரெபா மோனிகா ஜான் மற்றும் உபேந்திராஆகியோர்நடித்துள்ளனர்.இப்படத்தின்மீதுமிகப்பெரியஎதிர்ப்பார்ப்பு ரசிகர்கள் மத்தியில் நிலவி வருகிறது. இத்திரைப்படம் வரும் ஆகஸ்ட் 14ம் தேதி வெளியாகிறது. 'கூலி' படத்தில் இடம் பெற்றுள்ள சிக்கிடு, மோனிகா மற்றும் பவர் ஹவுஸ் பாடல்கள் வெளியாகி மக்களால் பெரும் வரவேற்பை பெற்று வருகிறது. படத்தின் புரோமோஷன் பணிகள் தீவரமாக நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில் , ரஜினி நடிக்கும் 'கூலி' படத்தின் இசை வெளியீட்டுவிழா ஆகஸ்ட் 2ம் தேதி சென்னை நேரு உள் விளையாட்டு அரங்கத்தில் நடைபெற உள்ளதாக சன் பிக்சர்ஸ் அறிவித்துள்ளது. மேலும் 'கூலி' படத்தின் இசை வெளியீட்டு விழா தொடர்பான வீடியோவை படக்குழு வெளியிட்டுள்ளது.

# வாஷிங்டன் ஓபன் டென்னிஸ்: ரைபகினா அரையிறுதிக்கு முன்னேற்றம்



வாஷிங்டன் ஓபன் டென்னிஸ் தொடர் அமெரிக்காவின் வாஷிங்டன் டி.சி.யில் நடைபெற்று வருகிறது. இதில் மகளிர் ஒற்றையர் பிரிவில் இன்று நடைபெற்ற காலிறுதி ஆட்டம் ஒன்றில் முன்னணி வீராங்கனையான எலினா ரைபகினா (கஜகஸ்தான்), போலந்தின் மாக்டலீனாப்ரெச் உடன் மோதினார். இந்த மோதலில் தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்தி அபாரமாக செயல்பட்ட ரைபகினா 63, 63 என்ற நேர் செட் கணக்கில் மாக்டலீனா ப்ரெச்சை வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறினார்.

# இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட்: 3ம் நாள் முடிவில் இங்கிலாந்து 544 ரன்கள் குவிப்பு



இந்தியா இங்கிலாந்து கிரிக்கெட் அணிகள் இடையிலான 4வது டெஸ்ட் போட்டி மான்செஸ்டரில் உள்ள ஓல்டு டிராப்போர்டில் நடந்து வருகிறது. இதில் முதலில் பேட் செய்த இந்தியா முதல் இன்னிங்சில் 358 ரன்களுக்கு ஆல்அவுட் ஆனது. பின்னர் தனது முதல் இன்னிங்சை அதிரடியாக தொடங்கிய இங்கிலாந்து 2வது நாள் முடிவில் 46 ஓவர்களில் 2 விக்கெட்டுக்கு 225 ரன்கள் எடுத்திருந்தது. தொடக்க வீரர்கள்பென்டக்கெட் 94ரன்னிலும்,ஜாக்கிராவ்லி 84ரன்களிலும் ஆட்டமிழந்தனர். துணை கேப்டன் ஆலி போப் (20 ரன்), முன்னாள் கேப்டன் ஜோ ரூட் (11 ரன்) களத்தில் இருந்தனர்.

இந்த நிலையில் 3வது நாளான நேற்று தொடர்ந்து பேட் செய்த இங்கிலாந்து பேட்ஸ்மேன்கள் முழுமையாக கோலோச்சினர். அவர்களின் 'விறுவிறு' வேகத்தை இந்திய பவுலர்களால் கட்டுப்படுத்த இயலவில்லை. ஆலி போப், ஜோ ரூட் கூட்டணியை மதிய உணவு இடைவேளை வரை ஒன்றும் செய்ய முடியவில்லை. 'நம்பர் ஒன்' பவுலர் ஜஸ்பிரித் பும்ராவின் பந்து வீச்சிலும் திணறடிக்கும் அளவுக்கு வீரியம் இல்லை. இதனால் அவர்கள் சிரமமின்றி ரன் சேகரித்தனர்.

மதிய உணவுக்கு பிறகு ஸ்கோர் 341 ஆக உயர்ந்த போது ஆலி போப் 71 ரன்களில் வாஷிங்டனின் சுந்தரின் பந்து வீச்சில் ஸ்லிப்பில் நின்ற லோகேஷ் ராகுலிடம் கேட்ச் ஆனார். அடுத்து வந்த ஹாரி புரூக் (3 ரன்) வாஷிங்டன் வீசிய பந்தை கிரீசை விட்டு இறங்கி வந்து அடிக்க முயற்சித்த போது ஏமாந்து ஸ்டம்பிங் ஆனார். ஹாரி புரூக் டெஸ்டில் ஸ்டம்பிங் முறையில் விக்கெட்டை பறிகொடுப்பது இதுவே முதல் முறையாகும்.

இதைத் தொடர்ந்து ஜோ ரூட்டுடன், கேப்டன் பென் ஸ்டோக்ஸ் இணைந்தார். ஒன்று, இரண்டு ரன் வீதம் எடுப்பதில் கவனம் செலுத்திய இவர்கள் ஏதுவான பந்துகளை மட்டும் எல்லைக்கோட்டுக்கு ஓட விட்டனர். இதனால் இங்கிலாந்து மிக வலுவான ஸ்கோரை நோக்கி பயணித்தது. அபாரமாக ஆடிய ஜோ ரூட் பந்தை பவுண்டரிக்கு தட்டிவிட்டு டெஸ்டில் தனது 38வது சதத்தை பூர்த்தி செய்தார். மறுமுனையில் அரைசதத்தை கடந்த கேப்டன் பென் ஸ்டோக்ஸ் 66 ரன்களில் (116 பந்து, 6 பவுண்டரி) தசைப்பிடிப்பால் பாதியில் வெளியேறினார். சிறிது நேரத்தில் ஜோ ரூட் (150 ரன், 248 பந்து, 14 பவுண்டரி) ஜடேஜாவின் சுழலில் ஸ்டம்பிங் ஆனார். தொடர்ந்து வந்த ஜேமி சுமித் (9 ரன்), கிறிஸ் வோக்ஸ் (4 ரன்) நிலைக்கவில்லை. அதன் பிறகு மறுபடியும் ஸ்டோக்ஸ் களம் புகுந்து ரசிகர்களை பரவசப்படுத்தினார்.

ஆட்ட நேர முடிவில் இங்கிலாந்து அணி முதல் இன்னிங்சில் 135 ஓவர்களில் 7 விக்கெட்டுக்கு 544 ரன்கள் சேர்த்து, 186 ரன்கள் முன்னிலையுடன் வலுவான நிலையை எட்டியுள்ளது. பென் ஸ்டோக்ஸ் (77 ரன்), லியாம் டாசன் (21 ரன்) அவுட் ஆகாமல் உள்ளனர். இந்திய தரப்பில் ஜடேஜா, வாஷிங்டன் சுந்தர் தலா 2 விக்கெட் கைப்பற்றினர். பும்ரா, முகமது சிராஜ், கம்போஜ் தலா ஒரு விக்கெட் எடுத்தனர்.இதில் பும்ராவுக்கு இங்கிலாந்து மண்ணில் இது 50வது விக்கெட்டாக (12 டெஸ்ட்) அமைந்தது. இஷாந்த் ஷர்மாவுக்கு பிறகு இங்கிலாந்தில் 50 விக்கெட் வீழ்த்திய 2வது இந்தியர் ஆவார். இன்று 4வது நாள் ஆட்டம் நடைபெறும்.

# நிதி பற்றாக்குறை காரணமாக பிரபல பயிற்சியாளரை நிராகரித்த இந்திய கால்பந்து கூட்டமைப்பு

இந்திய கால்பந்து அணியின் தலைமை பயிற்சியாளராக இருந்த ஸ்பெயினின் மனோலோ மார்கஸ், சமீபத்தில் ஆசிய கோப்பை கால்பந்து தகுதி சுற்றில் ஹாங்காங்கிடம் இந்திய அணி தோற்றதன் எதிரொலியாக பதவியை ராஜினாமா செய்தார். இதையடுத்து புதிய பயிற்சியாளர் தேடுதல் வேட்டையை அகில இந்திய கால்பந்து சம்மேளனம் தொடங்கியது. பயிற்சியாளர் பதவிக்கு விருப்பம் தெரிவித்து 170 பேர் விண்ணப்பம் அனுப்பி இருந்தனர்.

விண்ணப்பங்களை முன்னாள் கேப்டன் விஜயன் தலைமையிலான இந்திய கால்பந்து தொழில்நுட்ப கமிட்டி பரிசீலனை செய்து, ஸ்டீபன் கான்ஸ்டான்டின் (இங்கிலாந்து), ஸ்டீபன் டார்கோவிச் (சுலோவக்கியா), காலித் ஜமில் (இந்தியா) ஆகிய 3 பேரை இறுதி செய்துள்ளது. இவர்களில் ஒருவர் பயிற்சியாளராக நியமிக்கப்படுவார். இதனிடையே இந்திய கால்பந்து அணியின் பயிற்சியாளர் பதவிக்கு பிரபலபயிற்சியாளர்ஜாவிஹெர்னாண்டஸ்விண்ணப்பித்துள்ளார். இருப்பினும் அவரது விண்ணப்பத்தை இந்திய கால்பந்து கூட்டமைப்பு நிராகரித்துள்ளது. ஜாவியை ஏற்க எங்களுக்கு ஆர்வம் இருந்தாலும், நிறைய பணம் தேவைப்படுகிறது என இந்திய கால்பந்து கூட்டமைப்பின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். ஜாவி ஹெர்னாண்டஸ் பார்சிலோனா அணியில் ஆண்டுக்கு ரூ.81 கோடி சம்பளம் வாங்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.